Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 260 | உள்ளூர் - 18.09.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 260 | வெளியூர் - 19.09.2026 | சனிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**அருள் தரும் புரட்டாசி! இவர்களுக்கு ஜாக்பாட்?**

**வங்கிகளில் 13,175 வேலைகள்!**

**தேசிய அளவில் 3-வது அணி?**

**அரசியலில் ஒதுங்கி இருக்கிறேன் - சரத்குமார்!**

## 12 மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல்!

சென்னை, செப். 18–




தவெக அரசின் முதல் சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 13 மசோதா க்களில் 12 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.வி. அர்லேகர் ஒப்புதல் அளித்துள்ளார். நகர் ஊரமைப்பு, எம்எல்ஏக்களுக்கு கார் வழங்குதல், டாஸ்மாக் மதுபானங்களுக்கு மதிப்புக்கூட்டு வரி, விவசாய விளைபொருள் சந்தைப்படுத்துதல், அரசுப் பணியாளர் தேர்வாணையம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், ஊராட்சிகள் உள்ளிட்டவை தொடர்பான மசோதா க்கள் இதில் அடங்கும்.

கூட்டத்தொடர் முடிந்த 5 நாள்களுக்குள் ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார். தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான மசோதா மட்டும் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்ற 12 மசோதாக்களும் சட்டங்களாகி, செப்.15–ஆம் தேதி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

## பிறப்பு, இறப்பு பதிவு திருத்தச் சட்டம் அக்.1 முதல் அமல்!

புதுதில்லி, செப்.18–



பிறப்பு, இறப்பு பதிவில் தாமத த்தைத் தடுக்க திருத்தப்பட்ட பிறப்பு, இறப்பு பதிவு சட்டம் அக்.1 முதல் அமலுக்கு வருகிறது. 1969–ஆம் ஆண்டு சட்டத்தில் இதற்கான திருத்தங்கள் செய்ய ப்பட்டுள்ளன. புதிய விதிப்படி, 2 ஆண்டுகள் வரையிலான தாமதப் பதிவுக்கு மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக நடுவரின் உத்தரவு பெற வேண்டும். 2 ஆண்டுகளுக்கு மேல் தாமதமானால், முதல்நிலை குற்றவியல் மாஜிஸ்தி ரேட்டின் உத்தரவின் அடிப்படையில் மட்டுமே பதிவு செய்ய முடியும். இதற்காக சட்டத்தின் 13(3) பிரிவு திருத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார். இதற்கான அரசிதழ் அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

## இடைத்தேர்தல்: முதலமைச்சர் பிரசாரம்!

சென்னை, செப். 18–




மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளிலும் அடுத்த மாதம் 6–ந்தேதி இடைத்தேர்தல் நடைபெறுகி றது.

**5 முனை போட்டி**

2 தொகுதிகளிலும் த.வெ.க., தி.மு.க, அ.திமு.க, கம்யூனிஸ்டு கட்சிகள், நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகள் போட்டியிடுகின்றன. இதன் மூலம் இடைத்தேர்தலில் 5 முனைப்போட்டி நிலவுகிறது. மதுராந்தகம் தொகுதியில் த.வெ.க. சார்பில் மரகதம் குமரவேல், தி.மு.க. வேட்பாளராக பரந்தாமன், அ.தி.மு.க. சார்பில் கணிதா சம்பத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு சார்பில் சுகந்தி, நாம் தமிழர் கட்சி வேட்பாளராக ஜானகிராமன் ஆகியோர் களம் இறங்கி உள்ளனர்.

தாராபுரத்தில் த.வெ.க. சார்பில் சத்தியபாமா, தி.மு.க. வேட்பாளராக சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, இந்திய கம்யூனிஸ்டு சார்பில் லட்சுமணன், நாம் தமிழர் வேட்பாளராக கார்த்திகா ஆகியோரும் போட்டியிடுகிறார்கள்.

**தலைவர்கள்**

2 தொகுதிகளிலும் போட்டியிடுபவர்களின் இறுதி வேட்பாளர் பட்டியல் நாளை வெளியாக உள்ளது.

இதை தொடா்ந்து வருகிற 20–ந்தேதிக்கு பிறகு (அடுத்த வாரம்) அரசியல் கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட முடிவு செய்து இருக்கிறார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை அந்தந்த கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் மேற்கொண்டு உள்ளனர்.

**முதலமைச்சர் விஜய்**

முதலமைச்சர் விஜய் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளிலும் தலா 2 நாட்கள் என 4 நாட்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபடுகிறார்.

இந்த இடைத்தேர்தலில் வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் த.வெ.க. இருப்பதால் முதலமைச்சர் விஜய்யின் பிரசாரம் அதற்கு கை கொடுக்கும் என்று கட்சி நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**இடம் தேர்வு**

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளிலும் முதலமைச்சர் விஜய் பேசுவதற்காக பிரமாண்ட பொதுக்கூட்டத்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. அதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தாராபுரத்தில் வருகிற 25–ந்தேதியும், அடுத்த மாதம் 2–ந்தேதியும் விஜய் பிரசாரம் செய்ய திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தாராபுரம் உடுமலை சாலையில் உள்ள திருமலைபாளையம் பகுதியில் பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு உள்ளது.

**எதிர்பார்ப்பு**

கடந்த சட்டமன்ற தேர்தலில் முதலமைச்சர் விஜய் பிரசாரம் மேற்கொண்ட போது அவரை பார்ப்பதற்காக மக்கள் கூட்டம் அலைமோதியது. அவரது பிரசாரக் கூட்டங்களுக்கு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில் தான் தற்போது முதலமைச்சராக விஜய் தேர்தல் பிரசாரத்திற்கு செல்ல உள்ளார். இதையொட்டி 2 தொகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

த.வெ.க. ஆளும் கட்சியான பிறகு முதலமைச்சர் விஜய் பங்கேற்கும் தே ர்தல் பிரசார பொதுக்கூட்டம் என்பதால் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது.

**மு.க.ஸ்டாலின்**

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் கம்யூனிஸ்டு தலைவர்களும் 2 தொகுதிகளிலும் பிரசாரத்திற்கு தயாராகி வருகிறார்கள். மதுராந்தகம், தாராபுரம் 2 தொகுதிகளிலும் மு.க.ஸ்டாலின் 2 நாட்கள் பிரசாரம் செய்ய திட்டமிட்டு இருக்கிறார். இதேபோன்று எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலினின் பிரசார திட்டமும் தயாராகி வருகிறது.

**எடப்பாடி பழனிசாமி**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மதுராந்தகம் தொகுதியில் வருகிற 25, 26–ந்தேதிக ளிலும் அடுத்த மாதம் 3–ந்தேதியும் பிரசாரம் செய்ய முடிவு செய்து உள்ளதாக கட்சியினர் தெரிவித்துள்ளனர். இதேபோன்று தாராபுரம் தொகுதியிலும் 2 நாட்கள் தங்கியிருந்து அவர் பிரசாரம் செய்ய இருக்கிறார்.

**சீமான்**

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வருகிற 20–ந்தேதிக்கு பிறகு தனது தேர்தல் பிரசாரத்தை தொடங்குகிறார். 2 தொகுதிகளிலும் அவர் தங்கியிருந்து ஒரு வாரத்திற்கு மேல் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து பேச உள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்டு செயலாளர் வீரபாண்டியன் ஆகியோரும் கம்யூனிஸ்டு கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரத்தில் ஈடுபட இருக்கிறார்கள்.

**களை கட்டுகிறது**

இப்படி இடைத்தேர்தல்களில் தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட ஆயத்தமாகி வருவதால் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளிலும் தேர்தல் களம் களை கட்டுகிறது. தங்களது கட்சித் தலைவர்களை வரவேற்பதற்காக அனைத்து கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் முழுவீச்சில் ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.



## பெயரை மாற்றினார் கனிமொழி!

சென்னை, செப். 18–

திமுக துணைப் பொதுச்செயலாளரும் தூத்துக்குடி எம்.பி.யுமான கனிமொழி கருணாநிதி தனது பெயரை அதிகாரப்பூர்வமாக மாற்றியுள்ளார்.

இதுவரை ‘கனிமொழி கருணாநிதி’ என அறியப்பட்ட அவர், தனது தாயார் ராஜாத்தி அம்மாளின் பெயரையும் இணைத்து இனி ‘கனிமொழி ராஜாத்தி கருணாநிதி’ என அழைக்கப்படுவார். பெயர் மாற்றம் அரசு இதழிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஐபோன் 18 விற்பனை தொடக்கம்: ஆப்பிள் ஸ்டோர்களில் குவிந்த இளைஞர்கள்!

மும்பை, செப்.18




இந்தியாவில் ஐபோன் 18 மாடல்கள் இன்று விற்பனைக்கு வந்துள்ள நிலையில், மும்பை, டில்லி, பெங்களூரு, நொய்டா உள்ளிட்ட நகரங்களில் ஆப்பிள் ஸ்டோர்கள் முன்பு அதிகாலை முதலே இளைஞர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

ஆப்பிள் நிறுவனம் கடந்த 9–ஆம் தேதி ஐபோன் 18 புரோ, புரோ மேக்ஸ் மற்றும் மடிக்க க்கூடிய ஐபோன் டுயோ மாடல்களை அறிமுகப்படுத்தியது. இந்தியாவில் ஐபோன் டுயோ ₹2.99 லட்சம், ஐபோன் 18 புரோ ₹1.65 லட்சம், புரோ மேக்ஸ் ₹1.79 லட்சம் என விலை நிர்ணயி க்கப்பட்டு ள்ளதாக தெரிவிக்கப்ப ட்டுள்ளது. புதிய மாடல்களுக்கான முன்பதிவு செப்.12–ஆம் தேதி தொடங்கிய நிலையில், இன்று( செப்.18)நேரடி விற்பனை தொட ங்கியதால் ஆப்பிள் ஸ்டோர்களில் வாடிக்கை யாளர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது.

## டாலரிலிருந்து விலகும் சீனா!

# தங்கத்தை குவிக்கும் பெய்ஜிங்!

# 10 ஆண்டுகளில் சீனா +27%!

## இந்தியாவின் தங்க இருப்பு +58%!

புதுடெல்லி, செப். 18–



உலக நாடுகளின் மத்திய வங்கிகள் டாலர் சார்பைக் குறைத்து, தங்க இருப்பை அதிகரிக்கும் போக்கு கடந்த 10 ஆண்டுகளில் வேகமெடுத்துள்ளது. குறிப்பாக சீனா, அமெரிக்க அரசு பத்திரங்களில் செய்திருந்த முதலீட்டை பெருமளவில் குறைத்து, தங்கத்தை அதிகளவில் குவித்துள்ளது.

ஜூன் 2016 முதல் ஜூன் 2026 வரை, சீனாவின் அமெரிக்க அரசு பத்திர முதலீடு 1,185 பில்லியன் டாலரிலிருந்து 633.4 பில்லியன் டாலராக சரிந்துள்ளது. இது சுமார் 47 சதவீத குறைவு. அதேநேரத்தில் சீனாவின் தங்க இருப்பு 1,842.56 டன்னிலிருந்து 2,346.43 டன்னாக உயர்ந்து, 27.35 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

இந்தியா மாறுபட்ட அணுகுமுறையைக் கடைப்பிடித்துள்ளது. ரிசர்வ் வங்கியின் அமெரிக்க அரசு பத்திர முதலீடு 117.2 பில்லியன் டாலரிலிருந்து 186.4 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. அதேபோல் இந்தியாவின் தங்க இருப்பு 557.77 டன்னிலிருந்து 880.51 டன்னாக உயர்ந்து, பத்து ஆண்டுகளில் 57.86 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஜப்பானும் அமெரிக்க பத்திர முதலீட்டை 2.65 சதவீதம் குறைத்து, தங்க இருப்பை 10.55 சதவீதம் உயர்த்தியுள்ளது.

இதற்கிடையே, BRICS நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தில் உள்ளூர் நாணயங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அமெரிக்காவின் கடன் 40 டிரில்லியன் டாலரை எட்டியுள்ளதாகக் கூறப்படும் நிலையில், தங்கத்தை நோக்கி மத்திய வங்கிகள் திரும்புவது சர்வதேச நிதிச் சந்தையில் முக்கிய மாற்றமாகப் பார்க்கப்படுகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், தமிழ்நாடு அரசால் சென்னையில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள OMR GCC வழித்தடத்தில் அமைந்துள்ள DLF Downtown தரமணி வளாகத்தில் முதலாம் ஆண்டு 250 நபர்களுக்கு உயர் மதிப்பு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலும், வரும் ஆண்டுகளில் விரிவாக்கம் மேற்கொள்ளும் வகையிலும் அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட வால்கிரீன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அமைக்கவுள்ள தனது முதல் உலகளாவிய திறன் மையத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. விஜயகுமார், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், வால்கிரீன்ஸ் உலகளாவிய திறன் மையத்தின் தலைவர் திரு. உமாபதி விஸ்வநாதன், வால்கிரீன்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் மசூத் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பேனா நினைவுச் சின்னம்: தமிழக அரசுக்கு பசுமைத் தீர்ப்பாயம் கெடு!



சென்னை, செப். 18–

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவாக வங்கக் கடலில் 134 அடி உயர பேனா நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டத்துக்கு எதிரான வழக்கில், தமிழக அரசுக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு கெடு விதித்துள்ளது. இந்த வழக்கில் கடந்த 2022–ஆம் ஆண்டே அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டும், தொடர்ந்து அவகாசம் கோரப்பட்டு வருவதாக தீர்ப்பாயம் அதிருப்தி தெரிவித்தது. புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், பேனா நினைவுச் சின்னத் திட்டம் குறித்த அரசின் தற்போதைய நிலைப்பாடு என்ன? என்றும் கேள்வி எழுப்பியது.

அக்.29–ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யாவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என எச்சரித்த தீர்ப்பாயம், வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தது.

## CBSE 10, 12-ம் வகுப்பு தேர்வு அட்டவணை விரைவில்!



புதுடெல்லி, செப். 18–

202627 கல்வியாண்டுக்கான CBSE 10 மற்றும் 12–ம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணை விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதலில் உத்தேச அட்டவணையும், பின்னர் அக்டோபர்நவம்பரில் இறுதி அட்டவணையும் வெளியாகலாம். 2027 பொதுத்தேர்வுகள் பிப்ரவரி முதல் மார்ச் வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 204 பாடங்களுக்கான தேர்வை சுமார் 45 லட்சம் மாணவர்கள் எழுதவுள்ளனர். இதுவரை அதிகாரப்பூர்வ அட்டவணை வெளியாகவில்லை என்பதால், CBSE அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை மட்டுமே நம்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

த தலையங்கம் மதுரை மணி
வெள்ளிக்கிழமை 18.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 01-ம் தேதி

# கும்பாபிஷேக 'பாஸ்' குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி தேவை!



தமிழகத் திருக்கோயில்களில் நடைபெறும் கும்பாபிஷேகங்கள், பக்தர்களின் நம்பிக்கையும் ஆன்மிக உணர்வும் சங்கமிக்கும் பெருவிழாக்கள். இத்தகைய விழாக்களில் இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்பதே பக்தர்களின் விருப்பம். ஆனால், அந்த எதிர்பார்ப்புக்கு இடையே, 'அனுமதி அட்டை யாருக்குக் கிடைக்கிறது? எத்தனை அட்டைகள் வழங்கப்படுகின்றன? எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன?' என்ற கேள்விகள் எழும்போது, விழாவின் சிறப்பைவிட அட்டை வழங்கும் நடைமுறையே விவாதப் பொருளாகிவிடுகிறது.

பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும் அனுமதி அட்டை முறை தேவைப்படலாம். கோயில் வளாகத்தின் கொள்ளளவுக்கு ஏற்ப பக்தர்களை அனுமதிப்பதும் அவசியம். ஆனால், அந்தக் கட்டுப்பாடு யாருக்கு, எவ்வாறு பொருந்துகிறது என்பதில் தெளிவு வேண்டும். வெளிப்படைத்தன்மை இல்லாத இடத்தில்தான் சந்தேகங்களும் பாரபட்சம் குறித்த குற்றச்சாட்டுகளும் உருவாகின்றன. இதற்குத் தீர்வாக, மாநிலம் முழுவதும் பொருந்தக்கூடிய பொதுவான 'கும்பாபிஷேக அனுமதி அட்டை வழங்கும் வழிகாட்டு நெறிமுறைகளை' அரசு வகுக்க வேண்டும். ஒவ்வொரு கோயிலின் இடவசதி, பாதுகாப்புச் சூழல் ஆகியவற்றுக்கு ஏற்ப அனுமதிக்கக்கூடிய மொத்த நபர்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே நிர்ணயித்து அறிவிக்க வேண்டும். பொதுமக்கள், உபயதாரர்கள், நன்கொடையாளர்கள், ஊடகத்தினர் உள்ளிட்ட பிரிவுகளுக்கான ஒதுக்கீடும் தெளிவாக வெளியிடப்பட வேண்டும். விழாப் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அனுமதியையும் தனியாகக் கணக்கிட வேண்டும்.

பொதுமக்களுக்கான அட்டைகளைப் பெற எளிமையான விண்ணப்பமுறை அவசியம். இணையவழி விண்ணப்பத்துடன், இணைய வசதியைப் பயன்படுத்த இயலாதவர்களுக்குக் கோயில் அலுவலகம் அல்லது உதவி மையங்கள் மூலம் விண்ணப்பிக்கும் வாய்ப்பும் வழங்கப்பட வேண்டும். ஒதுக்கீட்டைவிட விண்ணப்பங்கள் அதிகமாக இருந்தால், சரிபார்க்கக்கூடிய கணினிக் குலுக்கல் முறையில் தேர்வு செய்யலாம். விண்ணப்பக் காலக்கெடு, தேர்வு முறை, முடிவு அறிவிக்கப்படும் நாள் ஆகியவை முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை, தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொதுவெளியில் வெளியிடுவதுடன், ஒரே நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட அட்டைகளைப் பெறுவதைத் தடுக்கும் நடைமுறையும் தேவை. அதே நேரத்தில், விண்ணப்பதாரர்களின் தனிப்பட்ட தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

உபயதாரர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கான அட்டை ஒதுக்கீட்டிலும் தெளிவான வரையறை இருக்க வேண்டும். அவர்களின் பங்களிப்பை மதிக்கும் அதே வேளையில், பொதுமக்களுக்கான வாய்ப்பும் உறுதிசெய்யப்பட வேண்டும். பரிந்துரைகளின் அடிப்படையில் கூடுதல் அட்டைகள் வழங்குவதற்கோ, அறிவிக்கப்பட்ட ஒதுக்கீட்டை மீறிக் கடைசி நேரத்தில் பட்டியல்களைச் சேர்ப்பதற்கோ இடமளிக்கக் கூடாது. தவிர்க்க முடியாத மாற்றங்கள் ஏற்பட்டால், அவற்றுக்கான காரணமும் எண்ணிக்கையும் பதிவு செய்யப்பட வேண்டும். கும்பாபிஷேக நிகழ்வுகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களுக்குத் தனியான அங்கீகார நடைமுறையும் அவசியம். விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு, தகுதி, அனுமதிக்கப்படும் செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் எண்ணிக்கை ஆகியவற்றை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், செய்தி சேகரிப்பதற்குத் தனி இடம் ஒதுக்கலாம். அனுமதி அட்டை கிடைக்காத பக்தர்களும் விழாவைக் காணும் வகையில், கோயிலுக்கு வெளியே உரிய இடங்களில் திரைகள், நேரலை ஒளிபரப்பு மற்றும் பாதுகாப்பான தரிசன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கும் திட்டமிடலில் உரிய கவனம் அளிக்கப்பட வேண்டும்.

விழா முடிந்ததும், அச்சிடப்பட்ட அல்லது மின்னணு முறையில் உருவாக்கப்பட்ட அட்டைகளின் மொத்த எண்ணிக்கை, வழங்கப்பட்ட அட்டைகள், பிரிவுவாரியான ஒதுக்கீடு ஆகிய விவரங்களைக் கோயில் நிர்வாகம் அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் அறிவிப்புப் பலகையிலும் வெளியிட வேண்டும். அட்டை வழங்கல் தொடர்பான புகார்களைப் பெறவும், குறிப்பிட்ட காலத்திற்குள் பதிலளிக்கவும் பொறுப்பு அலுவலர் மற்றும் உதவி மையம் ஏற்படுத்தப்பட வேண்டும்.


கும்பாபிஷேகம் என்பது பக்தர்களின் பெருவிழா. அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது நிர்வாகத்தின் கடமை; அதில் பங்கேற்பதற்கான வாய்ப்பை வெளிப்படையாக வழங்குவதும் அதே அளவிலான கடமை.

தெளிவான விதிகள், நியாயமான ஒதுக்கீடு, சரிபார்க்கக்கூடிய தேர்வு முறை, பொதுமக்களுக்குப் பதிலளிக்கும் நிர்வாகம்—இவை நடைமுறைக்கு வந்தால்தான் 'பாஸ்' குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். பக்தர்களின் நம்பிக்கையைக் காக்கும் இந்த நடவடிக்கையை அரசு தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

— ஆசிரியர்
மதுரை மணி நாளிதழ்



புதுக்கோட்டை, முக்கனி கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி–2026, சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையை வாடிக்கையாளர்களுக்கு சேலை வழங்கி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் என்.சுப்பிரமணியன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பிரகாஷ், கோ–ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் ஜெ.நாகராஜன், மேலாளர், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி(பொறுப்பு) சு.வைரமுத்து, புதுக்கோட்டை முக்கனி கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலைய மேலாளர் ஐ.ராஜ்முகமது மற்றும் அரசு அலுவலர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள், கோ–ஆப்டெக்ஸ் ஊழியர்கள் உட்பட பலர் உள்ளனர்.



பழனியில் தந்தை பெரியாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, பழனி ரயிலடி சாலையில் உள்ள, பெரியார் சிலைக்கு, த.வெ.க சார்பில், மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா தலைமையில், பழனிபாலன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டு, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தனர்.



பழனியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக, தந்தை பெரியாரின் 148 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, பழனி ஆர் எப் ரோட்டில் உள்ள அவரின் திரு உருவ சிலைக்கு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இளைஞ்சிறுத்தைகள் இளைஞர்கள் எழுச்சி பாசறை மாநில செயலாளரும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பழனி மாவட்ட தலைவருமான ஜே பி சரவணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்து உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

# பழனியில் இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலை ஊர்வலம்!




பழனி செப்டம்பர் 18–

பழனி அடிவாரத்தில் இருந்து இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலைகள் ஊர்வலம் தொடங்கியது. பின்பு பழனி பஸ் நிலையம் அருகே பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் இந்து முன்னணி ஜெகன், மாவட்ட துணைத் தலைவர் வெங்கடேசன், மாவட்ட செயலாளர்கள் அருண், அஜித் குமார், பாரதிய ஜனதா கட்சி தேசிய செயற்குழு உறுப்பினர் திருமலைசாமி, விஷ்வ ஹிந்து பரிஷத் செந்தில் ஜி, மதுரை கோட்ட தலைவர் பாலன், மாவட்ட செயலாளர்கள் ராஜா, அழகர் ரகு கருப்புச்சாமி உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். இதில் பழனியில் ஒவ்வொரு பகுதியில் இருந்தும், சுமார் 150 விநாயகர் சிலைகள் வந்து, ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளை திண்டுக்கல் சரக சசிமோகன், மாவட்ட போலீஸ் எஸ் பி ஜெயக்குமார், பழனி டிஎஸ்பி தேவராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

# திருப்பூர்; விநாயகர் சதுர்த்தி விதர்சன ஊர்வலம்!




திருப்பூர், செப். 18–


இந்து சமத்துவ கட்சி நிறுவனத் தலைவர் உழைப்பாளி பூபாலு தலைமையில் விநாயகர் சதுர்த்தி விதர்சன ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது ஊர்வலத்தில் மாநில பொதுச் செயலாளர் அ. செல்வம்.மாநில செயலாளர் பா குமரேசன் மாநிலச் செயலாளர் மா சிவா. மாநில அமைப்பாளர் ஜவகர் வடக்கு மாவட்ட தலைவர் சொ. கார்த்தி.மேற்கு மாவட்ட தலைவர் ரெ. பாலா .மாநிலச் செயலாளர் ரமேஷ்.வடக்கு மாவட்ட செயலாளர் பாளையக்காடு சூர்யா மற்றும் தேசபக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், பூலாங்குளம் கிராம மக்கள் தண்ணீர் வசதி மற்றும் போர்வெல் அமைத்து தர வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் அவர்களிடம் கோரிக்கை அளித்தனர். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம் உடன் இருந்தார் .



இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வளநாடு கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கரூர் பழைய பேருந்து நிலையம் ரவுண்டானா பகுதியில், இட ஒதுக்கீட்டுக்காக இன்னுயிரை நீத்த போராளிகளுக்கு மஞ்சள் வணக்கம் சொல்லும் நிகழ்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சியின் கரூர் மாவட்ட செயலாளர் புகலூர் க.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

# 'திங்க் கேஸ்' நிறுவனம் மாசுபாட்டை குறைக்க புதிய முயற்சி!




ராமநாதபுரம், செப். 18–

ராமநாதபுரத்தில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்து 'திங்க் கேஸ்' நிறுவனம் அரசு பேருந்துகளுக்கான பிரத்யேக சிஎன்ஜி நிலையத்தை அமைத்துள்ளது. இதன் மூலம் 100–க்கும் மேற்பட்ட அரசு பேருந்துகளுக்கு சிஎன்ஜி எரிபொருள் வழங்குகின்றனர். ஒருமுறை எரிபொருள் நிரப்பினால் சுமார் 220 கி.மீ. வரை பேருந்துகள் இயக்கப்படும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ராமநாதபுரத்தில் தற்போது 10 சிஎன்ஜி நிலையங்கள் செயல்பட்டு வரும் நிலையில், மேலும் நிலையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தனர். ராமநாதபுரம், ராமேஸ்வரம் பகுதிகளில் இதுவரை 3,036 வீடுகளுக்கு இயற்கை எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும். இயற்கை எரிவாயு பயன்பாட்டை அதிகரித்து வாகன மாசுபாட்டை குறைப்பதாகவும் நிறுவனத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

# ஆண்டிபட்டி அருகே சூறாவளி காற்றுடன் கனமழை: கார், வீடு சேதம்!



ஆண்டிபட்டி, செப். 18–

ஆண்டிபட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று மாலையில் சூறாவளி காற்றுடன் பெய்த கனமழை காரணமாக, 50 ஆண்டுகள் பழமையான புளியமரம் வேரோடு சாய்ந்து விழுந்ததில் கார் மற்றும் வீட்டின் மதில் சுவர் சேதமடைந்தது. இதனால் ஆண்டிபட்டி பாலக்கோம்பை சாலையில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. தகவலறிந்த ஆண்டிபட்டி தீயணைப்புத் துறையினர், நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மற்றும் மின்சாரத்துறை பணியாளர்கள் விரைந்து சம்பவ இடத்திற்கு வந்தனர். மின் இணைப்பை உடனடியாகத் துண்டித்த பணியாளர்கள், சாலையில் விழுந்து கிடந்த மரத்தை மர அறுவை இயந்திரங்கள் மூலம் துண்டு துண்டாக வெட்டிப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, ஒரு மணி நேரப் போராட்டத்திற்குப் பின் அப்பாதையில் போக்குவரத்து சீரமைக்கப்பட்டு வாகனங்கள் வழக்கம் போல் இயங்கத் தொடங்கின.



# அருள் தரும் புரட்டாசி! இவர்களுக்கு ஜாக்பாட்?



இந்து சாஸ்திர மரபில் பக்தி நெறியும் ஆன்மீகச் சிந்தனைகளும் மேலோங்கும் உன்னதமான மாதமாக புரட்டாசி விளங்குகிறது. எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் பேரருளைப் பெற உகந்த இந்த மாதத்தில், சனிக்கிழமை விரதம், ஆலய வழிபாடு மற்றும் அன்னதானம் செய்வது பெரும் புண்ணியத்தைத் தரும் என்பது நம்பிக்கை. ஜோதிடக் கணிப்புகளின்படி, இந்த புரட்டாசி மாதத்தில் கிரகங்களின் சஞ்சாரமானது அனைத்து ராசிகளிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளது. குறிப்பாக, சில குறிப்பிட்ட ராசிக்காரர்களுக்கு அபரிமிதமான தனவரவும் தொழில் முன்னேற்றமும் அமைய வாய்ப்புள்ளது.

**12 ராசிகளுக்கான பலன்கள் சுருக்கம்:**

**மேஷம்:** செவ்வாய் பகவானின் துணையோடு தன்னம்பிக்கை மிளிரும். நீண்ட நாட்களாகத் தள்ளிப்போன காரியங்கள் விரைந்து முடியும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து தொழில் விரிவடையும்; வீண் செலவுகளைக் குறைப்பது நல்லது.

**ரிஷபம்:** சுக்கிரனின் அனுகூலத்தால் பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். தங்கம், வெள்ளி மற்றும் அசையாச் சொத்து முதலீடுகளில் கூடுதல் கவனம் தேவை.

**மிதுனம்:** புதனின் ஆதிக்கத்தால் பேச்சுத்திறனும் சாதுரியமும் அதிகரிக்கும். எழுத்து, கலை, ஊடகம் மற்றும் வர்த்தகத் துறையில் உள்ளவர்களுக்குப் புதிய அங்கீகாரம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**கடகம்:** சந்திரனின் அருளால் மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் முழு ஆதரவு கிடைப்பதுடன், எதிர்பாராத பணவரவு மற்றும் நிலுவையில் உள்ள முக்கியக் காரியங்கள் வெற்றிகரமாக முடியும்.

**சிம்மம்:** சூரியனின் பலத்தால் உத்தியோகத்தில் பதவி, அதிகாரம் தேடி வரும். உயர் அதிகாரிகளின் பாராட்டும், புதிய பொறுப்புகளும் உங்கள் அந்தஸ்தை உயர்த்தும்.

**கன்னி:** குரு மற்றும் புதனின் பார்வைகளால் பொருளாதார நிலை சீராகும். கடன் சுமைகளைக் குறைப்பதற்கான வழிகள் பிறக்கும். சுபச்செய்திகள் இல்லம் தேடி வரும்.

**துலாம்:** சுக்கிரனின் ஆசியால் வாழ்க்கைத்தரம் உயரும். ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் யோகம் உண்டாகும். கலை, ஆடை வடிவமைப்பு, அழகு சாதனத் தொழிலில் உள்ளவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் குவியும்.

**விருச்சிகம்:** செவ்வாயின் வலிமையால் தடைகள் விலகி காரிய சித்தி உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் அமைதியும் குதூகலமும் நிலவும்.

**தனுசு:** குருவின் பரிபூரண அருளால் உயர் கல்வி, தொழில் விரிவாக்கம் மற்றும் வெளிநாட்டு முயற்சிகள் கை கூடும். சுபகாரியத் தடைகள் நீங்கி நற்செய்திகள் வந்துசேரும்.

**மகரம்:** சனி பகவானின் அருளால் உழைப்பிற்கேற்ற பலன் கிட்டும். தொழிலில் நிலையான முன்னேற்றமும், பழைய சிக்கல்களுக்கு நிரந்தரத் தீர்வும் கிடைக்கும். சேமிப்பை உயர்த்துவது நல்லது.

**கும்பம்:** புதிய வேலை, தொழில் வாய்ப்புகள் தேடி வரும். சனி குருவின் ஆதரவால் நீண்ட காலத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்பாட்டுக்கு வரும்.

**மீனம்:** எதிர்பாராத உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாடும் மன அமைதியும் கூடும். கல்வி மற்றும் வியாபாரத்தில் புதிய பரிமாணங்கள் தென்படும்.

**புரட்டாசி வழிபாட்டு நெறிமுறைகள்:**

புரட்டாசி சனிக்கிழமைகளில் அதிகாலையிலேயே நீராடி, இல்லத்தில் நெய்தீபம் ஏற்றி, "ஓம் நமோ நாராயணாய" என்ற அஷ்டாட்சர மந்திரத்தை உச்சரித்து வழிபடுவது அளப்பரிய பலன்களைத் தரும். பெருமாள் கோவில்களுக்குச் சென்று துளசி மாலை சாற்றுவதும், இயலாதவர்களுக்கு அன்னதானம் மற்றும் வஸ்திர தானம் செய்வதும் பித்ரு சாபங்களையும் கிரக தோஷங்களையும் போக்கி, குடும்பத்தில் சுபிட்சத்தை நிலைநிறுத்தும்.

# ரேஷன் அட்டைதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு!



சென்னை, செப். 18–

ரேஷன் அட்டைகளில் உள்ள பயனாளிகளின் விவரங்களை உறுதி செய்வதற்காக, செப்டம்பர் 19–ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் கைரேகை அடிப்படையிலான eKYC சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா (AAY) குடும்ப அட்டைகளுக்கு eKYC சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 96.48% பணிகள் நிறைவடைந்துள்ளன.

இதுவரை கைரேகைப் பதிவு செய்யாத குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குரிய ரேஷன் கடையில் செப்.19 அன்று eKYC–ஐ நிறைவு செய்ய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு இந்த முகாம் பொருந்தாது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## வயிற்றில் அடிக்கடி ‘குருகுரு’ சத்தமா?



வயிற்றில் அடிக்கடி ‘குருகுரு’ சத்தம் கேட்பது பசியால் மட்டுமே ஏற்படுவதில்லை. வயிறு மற்றும் குடலின் இயல்பான செரிமான இயக்கமும் இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

நாம் சாப்பிடும் உணவு மற்றும் திரவங்களை செரிமானப் பாதையில் நகர்த்த வயிறு, குடல் தசைகள் தொடர்ந்து சுருங்கி விரிகின்றன. அப்போது உணவு, திரவம் மற்றும் காற்று நகர்வதால் சத்தம் ஏற்படுகிறது.

வயிறு காலியாக இருக்கும்போது, இந்த சத்தத்தை மறைக்க உணவு இல்லாததால் ‘குருகுரு’ சத்தம் அதிகமாகக் கேட்கலாம். மேலும் வேகமாக சாப்பிடுவது, சாப்பிடும்போது அல்லது குடிக்கும்போது அதிக காற்றை விழுங்குவது, வாயுவை அதிகரிக்கும் சில உணவுகளை உட்கொள்வது போன்றவற்றாலும் வயிற்றில் சத்தம் ஏற்படலாம்.


குடலில் உள்ள காற்று, திரவம் மற்றும் செரிமானப் பொருட்களுடன் நகரும்போது இந்த சத்தம் உருவாகிறது. பெரும்பாலான நேரங்களில் இது செரிமான மண்டலத்தின் இயல்பான செயல்பாட்டின் ஒரு பகுதியாகவே இருக்கும்.

## சவுதி - ஹவுதி மோதல் தீவிரம்; 5 பேர் பலி!

ஈரான், சவுதி அரேபியா இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வரும் நிலையில் ஏமனில் இரு நாடுகளும் மறைமுக மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

அதேவேளை, அமெரிக்கா, ஈரான் மோதலின்போது ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சவுதி அரேபியா மீது தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ஏமனில் ஹவுதி கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது சவுதியும் தாக்குதல் நடத்தியது. மேலும், ஏமன் அரசுப்படையினருக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த சில வாரங்களாக மோதல் தீவிரமடைந்து வருகிறது.

உள்நாட்டுப்போர் தீவிரமடைந்து வரும் நிலையில் ஏமன் அரசுப்படையினர் கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகளை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி வருகின்றனர். மேலும், சவுதி அரேபியா மீதும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு சவுதியும் பதிலடி கொடுத்து வருகிறது. இரு தரப்பு மோதலால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் சவுதி அரேபியாவின் தென்கிழக்கே அமைந்துள்ள தைப் நகர் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை, டிரோன் மூலம் நேற்று தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். அதேபோல், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள தைஸ் நகர் மீது சவுதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.



## சினிமா துளிகள்..!

## “எப்போது திருமணம்?”- ரசிகரின் கேள்விக்கு பிரியா வாரியர் பதில்!



கேரள மாநிலம் திருச்சூரைச் சேர்ந்தவர் நடிகை பிரியா வாரியர். மோகினியாட்டக் கலைஞரான இவர், 2017–ம் ஆண்டு வெளியான மலையாளப் படமான ‘ஒரு அடார் லவ்’ மூலம் திரையுலகில் அறிமுகமானார். அந்த படத்தில் கண் சிமிட்டும் காட்சியின் மூலம் ஒரே இரவில் இந்திய அளவில் பிரபலமானார்.

தொடர்ந்து மலையாளம் மட்டுமின்றி இந்தி, கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட மொழிப் படங்களிலும் நடித்துள்ளார். தமிழில் ‘நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்’, ‘குட் பேட் அக்லி’, ‘சர்வம் மாயா’ உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

குறிப்பாக ‘குட் பேட் அக்லி’ படத்தில் அர்ஜுன் தாஸுடன் இணைந்து ‘தொட்டு தொட்டு பேசும் சுல்தானா’ பாடலுக்கு அவர் நடனமாடிய காட்சிகள் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றதுடன், சமூக வலைதளங்களிலும் வைரலாகின.

இதற்கிடையில், இவர் அஜித் – ஆதிக் ரவிச்சந்திரன் கூட்டணியில் உருவாக உள்ள ‘டேர் டெவில்’ படத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சமூக வலைதளங்களில் ஆக்டிவாக இருக்கும் பிரியா வாரியர், அவ்வப்போது தனது புகைப்படங்களை பதிவிட்டு ரசிகர்களுடன் கலந்துரையாடி வருகிறார். இந்த நிலையில், இன்ஸ்டாகிராமில் ரசிகர் ஒருவர், “நீங்கள் எப்போது திருமணம் செய்து கொள்வீர்கள்?” என்று பிரியா வாரியரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு சுவாரஸ்யமாக பதிலளித்த அவர், “நீங்கள் ஏன் எனக்கு திருமணம் செய்து வைக்க இவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்கள்? நான் இன்னும் சின்னப் பொண்ணுதான்!” என்று தெரிவித்துள்ளார். பிரியா வாரியரின் இந்த பதில் தற்போது சமூக வலைதளங்களில் கவனம் பெற்றுள்ளது.

# PF சம்பள வரம்பு ₹25,000 ஆக உயர்வு: 51 லட்சம் ஊழியர்களுக்கு பலன்!




புதுதில்லி, செப்.18–

ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியான EPF–க்கான சம்பள வரம்பை ₹15,000–லிருந்து ₹25,000 ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளது. கடந்த 12 ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்த இந்த வரம்பு உயர்வால், கூடுதலாக சுமார் 51 லட்சம் ஊழியர்கள் PF வரம்புக்குள் வருவார்கள். இவர்களுக்கு வருங்கால வைப்பு நிதி சேமிப்பு மட்டுமின்றி, ஊழியர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் வைப்புத்தொகை இணைக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தின் பலன்களும் கிடைக்கும். தற்போது ஊழியர் தனது சம்பளத்தில் 12 சதவீதம் PF பங்களிப்பாக செலுத்துகிறார்; நிறுவனமும் அதற்கு இணையான பங்களிப்பை வழங்குகிறது. ₹15,000 சம்பள வரம்பில் குறைந்தபட்ச பங்களிப்பு ₹1,800 ஆக இருந்த நிலையில், புதிய ₹25,000 வரம்பில் இது ₹3,000 வரை உயரக்கூடும். இதனால் மாதந்தோறும் கையில் கிடைக்கும் சம்பளம் ஓரளவு குறைய வாய்ப்புள்ளது. அதேநேரம், PF சேமிப்பு மற்றும் எதிர்கால ஓய்வூதியப் பலன்கள் அதிகரிக்கும். புதிய சம்பள வரம்புக்கு ஏற்ப நிறுவனங்கள் தங்களது சம்பளக் கணக்கீட்டு நடைமுறைகளை மாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ‘கிரீன் கார்டு’ விதிகளில் அதிரடி மாற்றம்!



வாஷிங்டன், செப். 18–

அமெரிக்க கிரீன் கார்டு விண்ணப்பங்களுக்கான ‘Public Charge’ விதிகளில் புதிய மாற்றங்கள் செப்.18 முதல் அமலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வழிகாட்டுதலின்படி, அரசின் நேரடி பண உதவி மட்டுமின்றி SNAP உணவு உதவி, Medicaid மருத்துவ உதவி, வீட்டுவசதி உதவி போன்ற நலத்திட்டங்களைப் பயன்படுத்திய விவரங்களும் தகுதி மதிப்பீட்டில் பரிசீலிக்கப்படலாம். செப்.18, 2026 முதல் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு புதிய விதிகள் பொருந்தும். குடும்பம், வேலைவாய்ப்பு மற்றும் Diversity Visa வழியாக கிரீன் கார்டுக்கு விண்ணப்பிப்பவர்களில் பலர் இதன் கீழ் வருவதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அகதிகள், புகலிடம் பெற்றவர்கள், T மற்றும் U விசா வைத்திருப்பவர்கள், VAWA சுயமனுதாரர்கள் உள்ளிட்ட சில பிரிவினருக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரரின் வயது, உடல்நிலை, குடும்ப நிலை, நிதி ஆதாரம், கல்வி மற்றும் திறன்கள் ஆகியவற்றையும் USCIS அதிகாரிகள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்வார்கள்.

# மருந்துக் கடைகளுக்கு வருகிறது ‘CCTV’ கண்காணிப்பு!



புதுடெல்லி, செப். 18–

மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு தேவைப்படும் மருந்துகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில், சில்லறை மருந்துக் கடைகளில் CCTV கேமரா பொருத்துவதை கட்டாயமாக்க மத்திய அரசு வரைவு விதிகளை வெளியிட்டுள்ளது.

பரிந்துரைச் சீட்டு மூலம் வழங்கப்படும் மருந்துகள் CCTV பார்வையில் விற்பனை செய்யப்பட வேண்டும். பதிவுகளை குறைந்தது 3 மாதங்கள் பாதுகாத்து வைக்க வேண்டும்; தேவைப்பட்டால் சுகாதாரத்துறை அதிகாரிகள் அவற்றை ஆய்வு செய்யலாம்.

இந்த விதிகள் சில்லறை மருந்துக் கடைகளுக்கு மட்டும் பொருந்தும்; மொத்த விற்பனையாளர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. வரைவு விதிகள் குறித்து கருத்து மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே இறுதி விதிகள் அமலுக்கு வரும்.

# தேசிய அளவில் 3-வது அணி?




புதுடெல்லி, செப். 18–

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு பின்னர் தி.மு.க. கூட்டணி உடைந்தது. காங்கிரஸ், வி.சி.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகள் விலகின. இந்திய கம்யூனிஸ்டு மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகளும் விலகின.இதனால் தேசிய அளவில் காங்கிரஸ் கட்டமைத்த 'இந்தியா' கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியது. மேலும் காங்கிரஸ் பங்கேற்கும் அல்லது முன்னெடுக்கும் எந்தவொரு ஆலோசனை கூட்டத்திலும் பங்கேற்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டையும் தி.மு.க. தலைமை எடுத்தது. எனவே தேசிய அளவில் பா.ஜனதா, காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக 3–வது அணியை உருவாக்கும் முயற்சியாக மாநில கட்சிகளின் தலைவர்களை ஒருங்கிணைக்கும் பணியை தி.மு.க. மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

அந்த வகையில் சமீபத்தில் மராட்டிய மாநில முன்னாள் முதல்–மந்திரியும், உத்தவ் சிவசேனா கட்சி தலைவருமான உத்தவ் தாக்கரேவை மும்பையில் உள்ள அவரது இல்லத்தில் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. சந்தித்து பேசியிருந்தார். அதனைத்தொடர்ந்து டெல்லியில் தேசியவாத காங்கிரஸ் (எஸ்.பி.) தலைவர் சரத்பவாரையும், அவரது மகளும், எம்.பி.யுமான சுப்ரியா சுலேவை கனிமொழி சந்தித்தார்.

இந்த நிலையில் அவர், மேற்கு வங்காள மாநில முன்னாள் முதல்–மந்திரியும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவருமான மம்தா பானர்ஜியை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்து பேசி உள்ளார். இந்த சந்திப்பு 3–வது அணி அமைப்பதற்கான அடித்தள பணி என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டாலும்,மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதாவை கொண்டு வந்தால், அதில் மாநில கட்சிகள் என்ன நிலைப்பாட்டை எடுக்கும்? என்பதை அறிந்து கொள்வதற்காகவே கனிமொழி ஒவ்வொரு கட்சி தலைவர்களை சந்தித்து பேசி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# தமிழகம் முழுவதும் வேகமாக பரவும் டெங்கு காய்ச்சல்...!




சென்னை, செப். 18–

தமிழகத்தில் சென்னை, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு பாதிப்பு அதிகளவில் உள்ளது. வெயில் மற்றும் மழை என காலநிலை மாற்றத்தால், டெங்குவை பரப்பும், ‘ஏடிஸ்’ வகை கொசுக்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக, மாநிலம் முழுவதும் பரவலாக டெங்கு பாதிப்பு உள்ளது. குறிப்பாக தினசரி, 70 முதல் 100 பேர் வரை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையை அரசு தீவிரப்படுத்தி உள்ளது. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரிகள், மாவட்ட ஆஸ்பத்திரிகளில் சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டு பிரத்யேக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் 244 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் டெங்குவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 16,577ஆக உயர்ந்துள்ளது. டெங்கு பாதிப்பால் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர். சென்னையில் நேற்று ஒரே நாளில் 87 பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் டெங்கு காய்சல் பாதிப்பு அதிகமாக உள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மேலும் கொசு ஒழிப்பு பணியில் 25,000க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். காய்ச்சல் ஏற்பட்டால் பொதுமக்கள் மருந்தகங்களுக்குச் சென்று தாங்களாகவே மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் வீடுகளின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வதன் மூலம் கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுத்து. டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.

# வார விடுமுறை: தமிழகம் முழுவதும் 2 ஆயிரத்து 655 சிறப்பு பஸ்கள் இயக்கம்!




சென்னை, செப். 18–

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் குணசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று (வெள்ளிக்கிழமை) அன்று 760 பஸ்களும், நாளை (சனிக்கிழமை) 520 பஸ்களும் இயக்கப்பட உள்ளன. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்று 115 பஸ்களும், நாளை 115 பஸ்களும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

மாதவரத்திலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை. திருச்சி, கும்பகோணம், வேலூர், ஓசூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு 18 மற்றும் 19–ந் தேதிகளில் தலா 70 பஸ்களும் சிறப்பு பஸ்களாக இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் 20–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) 805 சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## வங்கிகளில் 13,175 வேலைகள்!



| விவரம் | தகவல் |
|---|---|
| நிறுவனம் | Institute of Banking Personnel Selection (IBPS) |
| தேர்வு | CRP RRBs XV |
| பணிகள் | Officers Scale–I, II & III மற்றும் Office Assistants (Multipurpose) |
| மொத்த காலியிடங்கள் | 13,175 |
| வேலை வகை | நிரந்தர பணி |
| பணியிடம் | இந்தியா முழுவதும் |
| விண்ணப்பம் தொடக்கம் | 01.09.2026 |
| கடைசி நாள் | 21.09.2026 |
| விண்ணப்ப முறை | ஆன்லைன் |
| இணையதளம் | IBPS அதிகாரப்பூர்வ இணையதளம் |

# நீட் சிறப்பு மருத்துவ தகுதி மதிப்பெண் 30% ஆக குறைய வாய்ப்பு!



புதுதில்லி, செப்.18

நீட் சிறப்பு மருத்துவ இடங்களுக்கான இரண்டாம் கட்ட கலந்தாய்வுக்குப் பிறகும் 1,857 இடங்கள் காலியாக உள்ளதால், தகுதி மதிப்பெண்ணை 50 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக குறைக்கத் தயார் என மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இதனால் கூடுதலாக 6,000 தேர்வர்கள் தகுதி பெறுவர். தமிழ்நாட்டில் நிரப்பப்படாமல் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு மாற்றப்பட்ட இடங்களில் 40 இடங்களை மீண்டும் தமிழக அரசிடம் ஒப்படைக்கவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அவற்றை ஒரு வாரத்துக்குள் கலந்தாய்வு நடத்தி நிரப்ப வேண்டும். அதன் பின்னரும் காலியிடங்கள் இருந்தால், மருத்துவக் கலந்தாய்வுக் குழுவுக்கு மாற்றப்பட்டு அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கலந்தாய்வு நடத்தப்படும்.

# ஜேஇஇ, நெட் தேர்வுத் தேதிகள் வெளியீடு!




புதுதில்லி, செப்.18

ஜேஇஇ முதன்மை, யுஜிசி நெட், க்யூட் பிஜி உள்ளிட்ட 14 தேர்வுகளுக்கான தற்காலிக அட்டவணையை தேசிய தேர்வு முகமை (NTA) வெளியிட்டுள்ளது. JEE Main 2027 ஜன.2224 மற்றும் ஜன.2830 வரை நடைபெறும்; ஜன.31 மாற்றுத் தேதி. UGC NET டிச.1419 வரையும், CSIR UGC NET டிச.2021–லும் நடைபெறும். CUET PG மார்ச் 15, 8, 1220 மற்றும் 2425 தேதிகளில் நடத்தப்படும்; மார்ச் 30, 31 மாற்றுத் தேதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும் CMAT, ராணுவப் பள்ளிகள், SWAYAM, சைனிக் பள்ளிகள் உள்ளிட்ட தேர்வுகளும் 2026 டிசம்பர் முதல் 2027 மார்ச் வரை நடைபெறவுள்ளன. நிர்வாக அல்லது எதிர்பாராத சூழல்களுக்கு ஏற்ப தேதிகளில் மாற்றம் ஏற்படலாம்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை


Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## சபரிமலை மண்டல - மகரவிளக்கு பூஜை முன்னேற்பாடுகள் மும்முரம்!



திருவனந்தபுரம், செப். 18–

கேரளத்தில் உள்ள பிரசித்திபெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலில் வருடாந்திர மண்டல–மகரவிளக்கு பூஜை காலம், நவம்பர் மத்தியில் தொடங்கி அடுத்த ஆண்டு ஜனவரி 3–ஆவது வாரம் வரை நடைபெறவுள்ளது. இந்தக் காலகட்டத்தில் பக்தர்கள் மாலையணிந்து, சபரிமலைக்கு யாத்திரை மேற்கொண்டு, சுவாமி ஐயப்பனை தரிசிப்பது வழக்கம்.

நடப்பாண்டு யாத்திரையை சுமுகமாகவும், பாதுகாப்பாகவும் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை மாநில அரசு தீவிரப்படுத்தியுள்ளது. இந்தப் பணிகளுக்காக பொதுப் பணித் துறைக்கு அண்மையில் ரூ.551 கோடியை மாநில அரசு ஒதுக்கியது.

மண்டல–மகரவிளக்கு பூஜை காலகட்டத்தில் பக்தர்களின் வசதிக்காக 950 பேருந்துகள் இயக்கப்படும்; பக்தர்களின் கூட்டத்தைப் பொருத்து, கூடுதல் பேருந்துகள் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக, மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனம் வியாழக்கிழமை தெரிவித்தது.

பம்பை மற்றும் நிலக்கல்லில் சேவைகளைத் திறம்படகையாள்வதற்குத் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்படுவர். இப்பகுதிகளில் 1,400–க்கும் மேற்பட்டோர் பணியமர்த்தப்படுவர்.

நிலக்கல், பம்பையில் தொடர் சேவைகள், பேருந்து நிறுத்துமிடம், பயணிகள் காத்திருப்பு வசதிகள், போக்குவரத்து மேலாண்மை, பிற ஏற்பாடுகளில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபரிமலை மண்டல–மகரவிளக்கு பூஜை காலத்துக்கான முன்னேற்பாடுகளுக்காக கடந்த 2024–25–இல் ரூ.326.97 கோடியும், கடந்த 2025–26–இல் ரூ.377.80 கோடியும் அப்போதைய இடதுசாரிகள் அரசால் ஒதுக்கப்பட்டது. தற்போது காங்கிரஸ் கூட்டணி அரசு ரூ.551 கோடி ஒதுக்கியுள்ளது.

## நாக்பூர் புனித பயணம்: கலெக்டர் தகவல்!

தேனி, செப். 18–

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்நாட்டைச் சேர்ந்த பௌத்தர்கள் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவிற்கு புனித பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களுக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.5000/–வரை மானியம் வழங்கும் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2026–ஆம் ஆண்டு பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் பௌத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலச மஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம் சென்னை–600 005 என்ற முகவரியில் உரிய ஆவணங்களுடன் 15.11.2026–க்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## குற்றப்பிரிவில் அன்பில் மகேஸ் ஆஜர்!



சென்னை, செப். 18–

சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல்துறை முன்னிலையில் முன்னாள் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெள்ளிக்கிழமை காலை ஆஜரானார்.

தனியார் பள்ளி நிர்வாகங்களிடம் நிரந்தர அங்கீகாரம், பள்ளி தரம் உயர்வு மற்றும் இதர அரசு அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வசூலித்து மோசடி செய்த புகாரில், சென்னை பெருநகர மத்தியக் குற்றப் புலனாய்வு போலீஸார் ஏற்கெனவே வழக்குப்பதிந்து பி.டி. அரசகுமார் உள்ளிட்ட 3 பேரை கைது செய்தனர்.

இவர்களிடம் நடத்திய விசாரணையின் அடுத்தகட்ட நகர்வை மத்தியக் குற்றப்புலனாய்வு போலீஸார் தொடங்கியுள்ளனர்.

இதன்படி முன்னாள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு எதிராக ஊழல் மற்றும் நம்பிக்கை மோசடி செய்ததாக வழக்குப்பதிவு செய்து, அவருக்குச் சொந்தமான சென்னை மற்றும் திருச்சியிலுள்ள வீடுகள், உறவினர், உதவியாளர் வீடு என மொத்தம் 6 இடங்களில் புதன்கிழமை ஒரே நேரத்தில் சோதனை நடைபெற்றது.


அன்று மாலை 4 மணி வரையில் நடைபெற்ற சோதனையில் சில ஆவணங்களை பறிமுதல் செய்து, அதன் விவரங்களை பட்டியலிட்டு அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் ஒப்புதல் பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து, சென்னையில் உள்ள மத்திய குற்றப்பிரிவு காவல்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க உத்தரவிட்டிருந்தனர்.

அதன்படி, சென்னை வேப்பேரியில் உள்ள மத்திய குற்றப்பிரிவு அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் இன்று காலை விசாரணைக்காக ஆஜராகியுள்ளார்.

அவரிடம் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள், அரசக்குமாரின் வாக்குமூலம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் காவல்துறையின் விசாரணை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரசியலில் ஒதுங்கி இருக்கிறேன் - சரத்குமார்!



நாகர்கோவில், செப். 18–

"நான் அரசியலில் தற்போது இல்லை, ஒதுங்கி இருக்கிறேன். தமிழக அரசின் செயல்பாடு குறித்த கேள்விக்கு பதில் அளிக்க நிறைய பேர் உள்ளனர்" என்று மழுப்பலாக கூறிவிட்டு சென்றார்.

நாகர்கோவிலில் நடந்த ஒரு திருமண விழாவில் பிரபல நடிகரும், பா.ஜனதா கட்சியின் தேசிய பொதுக்குழு உறுப்பினருமான சரத்குமார் கலந்து கொண்டார். அவர் மணமக்களை வாழ்த்தியதோடு, பிரதமர் மோடியின் பிறந்தநாளையொட்டி மணமக்களுடன் இணைந்து ஏழைகளுக்கு தையல் எந்திரங்களை வழங்கினார். பின்னர் நிருபர்கள், சரத்குமாரிடம் கேள்வி எழுப்பினர்.


அதாவது "தமிழக முதல்–அமைச்சர் விஜய் வெளிநாட்டிற்கு சென்று முதலீடுகளை ஈர்த்து இருப்பதாக கூறியிருக்கிறார். அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டனர்.

அதற்கு அவர் உடனடியாக பதில் அளிக்காமல் நகர்ந்து சென்றார். நடந்து சென்று கொண்டே அவர் கூறுகையில் "நான் அரசியலில் தற்போது இல்லை, ஒதுங்கி இருக்கிறேன்.

தமிழக அரசின் செயல்பாடு குறித்த கேள்விக்கு பதில் அளிக்க நிறைய பேர் உள்ளனர். மாநில தலைவர் இருக்கிறார், அவர் பதில் அளிப்பார்" என்று மழுப்பலாக கூறிவிட்டு சென்றார்.

சரத்குமாரின் இந்த பதில் அங்கு இருந்தவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

## காய்ச்சல் பாதிப்புக்கு கூடுதல் கட்டணம் வசூல்: தனியார் மருத்துவமனைகளுக்கு எச்சரிக்கை!



சென்னை, செப். 18–

தமிழகத்தில் பருவநிலை மாற்றத்தால் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவி வருகிறது. இந்த ஆண்டில் இதுவரை, 16,500 பேருக்கு மேற்பட்டோர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் உயிரிழந்தனர். இதனால், காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையை அரசு தீவிரப்படுத்தி உள்ளது. அதேபோல், அரசு மருத்துவமனைகளிலும் சிறப்பு வார்டு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், தனியார் மருத்துவமனைகளில் டெங்கு காய்ச்சல் சிகிச்சை அளிக்க கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

குறிப்பாக, டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண வார்டில் சிகிச்சை பெற, ரூ.22,000 முதல் ரூ.75,000 வரையிலும், தீவிர சிகிச்சைக்கு ரூ. 2 லட்சம் வரையிலும் தினசரி வசூலிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவ்வாறு வசூலிக்கும் மருத்துவமனைகள் மீது பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என மக்கள் நல்வாழ்வு துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, மக்கள் நல்வாழ்வு துறை அதிகாரிகள் கூறியதாவது: அரசு மருத்துவமனைகளில், காய்ச்சல் பாதிப்புகளைக் கண்காணித்து, தேவையான மருத்துவ சிகிச்சையை வழங்கும் வகையில், சிறப்பு வார்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காய்ச்சலுடன் வரும் நோயாளிகளின் உடல்நிலையை மதிப்பீடு செய்து, நோயின் தீவிர தன்மைக்கு ஏற்ப, முன்னுரிமையில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய சூழலில், அரசு மருத்துவமனைகளிலேயே போதிய அளவு படுக்கை வசதிகள் உள்ளன.

தனியார் மருத்துவமனைகளில் சூழலை பயன்படுத்தி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிா என்பது குறித்து விசாரணை நடத்தப்படும். அதேநேரம், வழக்கமாக வசூலிக்கப்படும் தொகையில் இருந்து கட்டணம் மாறுபட்டிருந்தால், சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால், காய்ச்சலுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தடை விதிக்கப்படும்.

தனியார் மருத்துவமனைகளில், கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக தெரிந்தால், 104 என்ற எண்ணில் பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம். வீடுகள், சுற்றுப்புறங்களில் மழைநீர் மற்றும் நன்னீர் தேங்கக்கூடிய வகையிலான பொருள்களைக் கண்டறிந்து அகற்ற வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

## 'டேப்ஸ்' திட்டத்தில் இடைக்கால ஓய்வூதியம் குறைப்பு: ஜாக்டோ ஜியோ கடும் எதிர்ப்பு!




சென்னை, செப். 18–

'டேப்ஸ்' திட்டத்தில் இடைக்கால ஓய்வூதியம் குறைக்கப்பட்டதற்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ–ஜியோ கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் வெளியிட்ட அறிக்கை:

தவெக அரசு பொறுப்பேற்று 4 மாதங்கள் ஆகியும் தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்துக்கான (டேப்ஸ்) விதிமுறைகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் வெளியிடாமல் காலம்தாழ்த்தி வருவது ஏற்புடையதல்ல.

டேப்ஸ் விதிமுறைகள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1972–இன் அடிப்படையில் தான் அமைய வேண்டும். அதில் எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது.

டேப்ஸ் விதிகள் வெளியிடுவதற்கு ஏற்படும் கால தாமதத்தால் ஓய்வூதியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இடைக்கால நிவாரணமாக அனைத்து ஓய்வூதியதாரருக்கும் அவர்கள் இறுதியாக பெற்ற அடிப்படை சம்பளத்தில் 30 சதவீதம் கணக்கிடப்பட்டு, அத்துடன் 60 சதவீத அகவிலைப்படி வழங்கும் நடைமுறையானது தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி கடந்த ஜன. 1–ஆம் தேதிக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்கள் 2 மாதங்களாக இடைக்கால ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இந்த நிலையில், இடைக்கால ஓய்வூதியம் கணக்கீடுவது தொடர்பாக செலவினத் துறை செயலர் கடந்த 11–ஆம் தேதி கருவூல கணக்கு இயக்குநருக்கு அனுப்பிய கடிதத்தில், 'ஓய்வு பெற்றவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இடைக்கால ஓய்வூதியம் 30 சதவீதம் வழங்கப்படாது என்றும், அதற்குப் பதில் ரூ.10,000 மட்டுமே இனி வழங்கப்படும் என்றும், 18 ஆண்டுகளுக்கு குறைவான பணிக்காலம் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கூடுதல் இடைக்கால ஓய்வூதியம் 10 மாத தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். 18 ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ளோருக்கு 30 சதவீதம் இடைக்கால ஓய்வூதிய நடைமுறை தொடரும்' எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. டேப்ஸ் விதிமுறைகள் வெளியிட தமிழக அரசு வேண்டுமென்றே காலம்தாழ்த்தி வரும் சூழ்நிலையில், ஏற்கெனவே பெற்ற இடைக்கால ஓய்வூதியத்தைப் பிடித்தம் செய்வதும், இடைக்கால ஓய்வூதியத்தைக் குறைப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விஷயத்தில் முதல்வர் விஜய், உடனடியாக தலையிட்டு தவெக தேர்தல் வாக்குறுதியின்படி மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தவும், அதுவரை இடைக்காலமாக டேப்ஸ் திட்டத்துக்கான விதிகளை வெளியிடவும், டேப்ஸ் திட்டத்தில் இடைக்கால ஓய்வூதியத்தை குறைக்க வெளியிடப்பட்ட நிதித்துறை கடிதத்தைத் திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவித்துள்ளனர்.

## இடைத்தேர்தல்! அதிமுக நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலில் எஸ்.பி.வேலுமணி, சி.வி. சண்முகம் இல்லை!



சென்னை, செப். 18–

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலுக்கான நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலை அதிமுக தலைமை வெளியிட்டுள்ளது.

மதுராந்தகம் (தனி) தொகுதியில் கணிதா சம்பத்தும் தாராபுரம் (தனி) தொகுதியில் பானுமதியும் அதிமுக வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளனர்.

இந்த நிலையில், இரு தொகுதிகளிலும் அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்யும் கட்சியின் நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியல் வெளியாகியுள்ளது. இதில், கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி, துணைப் பொதுச் செயலர் கே.பி. முனுசாமி, பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், கொள்கை பரப்புச் செயலர் தம்பிதுரை, கட்சி தேர்தல் குழு செயலர் பொள்ளாச்சி ஜெயராமன் உள்ளிட்ட மூத்த உறுப்பினர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், முன்னாள் அமைச்சர்களும் மூத்த உறுப்பினர்களுமான எஸ்.பி. வேலுமணி மற்றும் சி.வி. சண்முகம் ஆகியோரின் பெயர்கள் நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை. சமீபகாலமாக கட்சித் தலைமையின் மீது எஸ்.பி. வேலுமணி மற்றும் சி.வி. சண்முகம் ஆகியோர் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். முன்னாள் நிர்வாகிகளான சசிகலா, டிடிவி தினகரன் ஆகியோரை மீண்டும் கட்சியில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இண்டிகோ விமானத்தின் சிறப்பு சேவைகளுக்கான கட்டணம் உயர்வு!



சென்னை, செப். 18–

இண்டிகோ நிறுவனம் பல்வேறு கூடுதல் மற்றும் சிறப்புச் சேவைகளுக்கான கட்டணத்தை வியாழக்கிழமை முதல் உயர்த்தியுள்ளது.

நாட்டின் மிகப்பெரிய விமான நிறுவனமான இண்டிகோ, நாளொன்றுக்கு 2,500–க்கும் மேற்பட்ட விமானங்களை இயக்கி வருகிறது. ஒட்டுமொத்த உள்நாட்டு விமான சேவைகளில் 60 சதவிகிதத்துக்கு மேல் இண்டிகோ நிறுவனம் பங்களித்து வருகிறது.

இந்த நிலையில், கூடுதல் பேக் கட்டணம், கைக்குழந்தைகளுக்கான பயணக் கட்டணம், தனியாகப் பயணிக்கும் குழந்தைகளுக்கான கட்டணம் உள்ளிட்டவற்றை இண்டிகோ நிறுவனம் வியாழக்கிழமை முதல் உயர்த்தியுள்ளது. அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக எடைக்கு ஒரு கிலோவுக்கு ரூ. 700 ஆக இருந்த கட்டணம் ரூ. 800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பிறந்து மூன்று நாள்கள் முதல் இரண்டு வயது வரையிலான குழந்தைகள் பயணிக்க வசூலிக்கப்படும் கட்டணத்தை ரூ. 2,000–லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தியுள்ளது. இந்த டிக்கெட்டில் பயணிக்கும் குழந்தைகளுக்கு தனி இருக்கை கிடையாது.

உள்நாட்டு விமானங்களில் பெற்றோர் இல்லாமல் தனியாக பயணிக்கும் 5 முதல் 12 வயது வரையிலான சிறார்களுக்கு வசூலிக்கப்படும் கூடுதல் கட்டணமான ரூ. 5,000–ஐ தற்போது ரூ. 5,999 ஆக இண்டிகோ நிறுவனம் உயர்த்தியுள்ளது. இதே சேவைக்கு வெளிநாட்டு விமானங்களில் ரூ. 12,999 ஆக வசூலிக்கப்படுகிறது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020